பக்கங்கள்: 07

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 03 வள்ளுவர் ஆண்டு 2053 புரட்டாதி 05 வியாழக்கிழமை 22.09.2022 கதிர் 208

## அரச வங்கி ஊழியர் வெட்டிப்படுகொலை

இளைஞர் ஒருவர் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

அரச வங்கியில் மத்திய நிலை ஊழியராகப் பணிபுரியும் 29 வயதான ரஷிக வினோத் என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

இந்தச் சம்பவம் கம்பஹா மாவட்டம் – பஹலகமவில் இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

☞2

# ரவிகரன், மயூரன் பிணையில் விடுதலை!

## முல்லைத்தீவுப் பொலிஸாருக்கு எதிராகப் போராடத் தயாராகும் மக்கள்



முல்லைத்தீவு பொலிஸாரால் கைது செய்யப்பட்ட வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் துரைராசா ரவிகரன் மற்றும் சமூகச் செயற்பாட்டாளர் இரத்தினராசா மயூரன் ஆகியோர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

இருவரும் முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றில் இன்று முன்னிலைப்படுத்தப்பட்ட போதே பிணை உத்தரவை நீதிவான் விடுத்தார்.

முல்லைத்தீவு - தண்ணிமுறிப்பு, குருந்தூர்மலையைச் சூழவுள்ள தமிழ் மக்களுக்குரிய 632 ஏக்கர் பூர்வீகக் காணிகளைத் தொல்லியல் திணைக்களம் அபகரிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றமை மற்றும் நீதிமன்ற கட்டளையைப் புறந்தள்ளி பௌத்த கட்டுமானம் மேற்கொள்ளப்படுகின்றமை என்பவற்றைக் கண்டித்து தண்ணிமுறிப்பு மற்றும் குமுழமுனை பகுதி மக்களால் நேற்று குருந்தூர்மலையில் ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் மக்களோடு கலந்துகொண்ட வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் துரைராசா ரவிகரன்

☞2

# இலங்கையின் 58 இராணுவ அதிகாரிகள் ஐரோப்பிய நாடுகளுக்குள் நுழையத் தடை



## ஐ.நா. மனித உரிமைகள் பேரவை அதிரடி

இலங்கையில் போர்க்குற்றங்களை எதிர்நோக்கியுள்ள 58 இராணுவ அதிகாரிகளைத் தண்டிக்கும் சர்வதேச பொறிமுறையை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை நடைமுறைப்படுத்தியுள்ளது எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

☞2

## பல்கலை மாணவன் சாவு: விசாரணைகள் ஆரம்பம்



பேராதனை பல்கலைக்கழக கலைப்பீட இறுதியாண்டு மாணவன் அஞ்சன குலதுங்க (வயது 24) உயிரிழந்தமை தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

கடந்த 16ஆம் திகதி

☞2

### போதைப்பொருள் பாவனையால்

## யாழ். பிரபல பாடசாலையில் மயங்கி விழுந்த மாணவர்கள்

போதைப்பொருள் பாவனையைக் கட்டுப்படுத்துவதற்கு யாழ்ப்பாணம் மாவட்டத்தில் காணப்படுகின்ற பாடசாலைகளின் பங்களிப்புப் போதாது என்று யாழ். போதனா மருத்துவமனையின் சட்ட மருத்துவ அதிகாரி பிரணவன் தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது:-


யாழ். மாவட்டத்தில் போதைப்பொருள் பாவனை அதிகரித்து வருகின்றது. எனினும், ஆசிரியர்கள், அதிபர்கள் தமது பாடசாலைகளில் நற்பெயருக்குக் களங்கம்

☞2

## குளவிக்கொட்டுக்கு இலக்காகி தோட்டத் தொழிலாளி மரணம்!

கொத்மலை, வெவன்டன் தோட்டத்தில் பணிபுரிந்து வந்த தோட்டத் தொழிலாளி ஒருவர் குளவிக் கொட்டுக்கு இலக்காகி உயிரிழந்துள்ளார். குளவிக் கொட்டுக்கு இலக்காகி 60 மற்றும் 23 வயதுடைய இருவர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில், 60 வயதுடைய வயோதிபர் உயிரிழந்துள்ளார்.

# அரச ஊழியர்களுக்கு சம்பளம் கிடைக்குமா?



## சபையில் அமைச்சர் பந்துல பதில்

அரசு ஒருபோதும் அரச ஊழியர்களுக்கு வேதனம் வழங்குவதைத் தவிர்க்காது. இக்கட்டான சந்தர்ப்பங்களில் வேறு செலவுகளைக் குறைத்து அதனூடாக வேதனங்கள் வழங்கப்படும்.

இவ்வாறு அமைச்சர் பந்துல குணவர்தன சபையில் இன்று தெரிவித்தார்.

அரச ஊழியர்களுக்குரிய வேதனத்தைச் செலுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது என்று அமைச்சர்

☞2

## சூதாட்டத்தில் ஈடுபட்ட 4 பெண்கள் சிக்கினர்

பணம் வைத்து சூதாடிய நான்கு பெண்கள் அம்பலாங்கொடை - குலிகொடை என்ற இடத்தில் வைத்துப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கணவன்மாரிடம் குழந்தைகளை ஒப்படைத்துவிட்டு இந்த நான்கு பெண்களும் பணம்வைத்துச்சூதாடுவதற்குச் சென்றிருந்தபோது தம்மிடம் சிக்கினர் என்று பொலிஸார் தெரிவித்தனர். பணம் வைத்து சூதாடும் பெண்கள்

☞2

## இணக்க அரசியல் மூலம் தீர்வு காணவே முடியாது!

### முன்னாள் எம்.பி. சிறிநேசன் தெரிவிப்பு



இலங்கை அரசுடன் இணக்க அரசியல் செய்வதால் தமிழ்த் தேசியக் கட்சிகளால் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஞானமுத்து சிறிநேசன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையில்

☞2

## இணக்க.......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
முக்கியமாகக் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் வருமாறு:-

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தமிழ்த் தேசியக் கட்சிகள் அரசுடன் முரண்படாமல் இணக்க அரசியல் செய்தால்தான் தேசிய இனப்பிரச்சினை விடயத்தில் தீர்வுகாணமுடியும் என்று இன்றும் சிலர் பேசுவதையும் முணு முணுப்பதையும் கேட்க முடிகின்றது.

இலங்கை அரசுடன் இணக்க அரசியல்செய்து அவர்களது உள்நாட்டுப் பொறிமுறை மூலமாக இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியும் என்பது பேரினவாதம் என்னும் இருட்டறையில் தீர்வு என்னும் கறுப்புப்பூனையைப் பிடிக்கும் வீண்முயற்சியாகவே அமையும்.

அரசுடன் இணைந்து பணியாற்றித் தீர்வை எட்டலாம் என்பது மக்களை ஏமாற்றி அரசியல் செய்து, இன்னும் காலத்தைக் கரைக்கும் செயலாகவே அமையும்.

உளுத்துப்போன உள்நாட்டுப்பொறிமுறைகளால் பிரச்சினைகளை உருவாக்க முடியுமேயொழிய தீர்க்க முடியாது என்பதே வரலாற்று உண்மையாகும்.

தமிழ்த் தேசியக் கட்சிகளிலும் உள்நாட்டுப்பொறிமுறைபற்றிப்பேசுபவர்கள் இருந்தால் அவர்கள் வராற்றை மறக்கும் அல்லது மறைக்கும் இரட்டை முகவர்களாகவே இருக்க முடியும்.

ராஜபக்ஷ அரசுடன் இணக்க, ஐக்கிய அரசியல் செய்தால் கிழக்கைக் காப்பாற்றலாம், கல்முனை வடக்கு உப பிரதேச செயலகத்தைத் தரமுயர்த்தலாம் என்ற கிழக்கிருப்புவாத இராஜாங்க அமைச்சர்கள் இரு விடயங்களை மாத்திரமே செய்கின்றார்கள். அவை அரசு சொல்வதற்கெல்லாம் கை உயர்த்துவதும் தலையாட்டுவதும் மட்டுமேயாகும்.

எதிர்த்தால் பதவிகள் காலியாகும், குற்றக்கோவைகள் இவர்களின் தலைகளைச் சுற்றிவரும். இதுதான் இணக்க அரசியலின் இழித்தவாயர்களின் நிலைமையாகும்.

நிறைவேறாத ஒப்பந்தங்கள், உடன்படிக்கைகள், கூடிய கூட்டங்கள், பேச்சுகள் ஏமாற்றங்களேயொழிய சாதனைகளாக இருக்க முடியாது. அவை இனவாத சாத்தான்கள் ஓதிய வேதங்களாகவே அமையும் - என்றுள்ளது.

## அரச ஊழியர்..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பந்துல குணவர்தன சபையில் நேற்று தெரிவித்திருந்தார். இது தொடர்பில் நாடாளுமன்றில் இன்று காமினி வலேபொட எம்.பி. கேள்வி எழுப்பினார்.

அரச ஊழியர்களுக்குப் பணம் செலுத்த முடியாத நிலை ஏற்பாட்டுள்ளது என அறிவித்தீர்கள். எதிர்வரும் 25 ஆம் திகதி அரச ஊழியர்களுக்கு வேதனம் வழங்கப்பட வேண்டும். எனவே, இந்த மாதத்துக்குரிய வேதனம் கிடைக்குமா என்பதை நீங்கள் தெளிவுபடுத்த வேண்டும்.

அத்துடன், சர்வதேச நாணய நிதியத்துடன் ஏற்பட்ட இணக்கத்தின் பிரகாரம் பணத்தை அச்சிடமுடியாது என்று தெரிவித்திருந்தீர்கள். நாம் வினவியபோது, சர்வதேச நாணய நிதியத்துடன் எந்த உடன்படிக்கையும் இல்லை. வெளிப்படுத்த ஒன்றும் இல்லை என்றீர்கள்.

இந்த முன்னுக்குப் பின் முரணான விடயம் தொடர்பில் விளக்கமளிக்க வேண்டும்- என்று நாடாளுமன்ற உறுப்பினர் காமினி வலேபொட கோரினார்.

இதற்குப் பதிலளித்த அமைச்சர் பந்துல குணவர்தன,

இலங்கை அரசு, சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து 16 தடவைகள் கடன் பெற்றுள்ளது.

கடந்த அரசும் 1.5 பில்லியன் டொலரைக் கடனாகப் பெற்றது. அவ்வாறான எந்தச் சந்தர்ப்பத்திலும், ஒப்பந்தம் குறித்துநாடாளுமன்றுக்குஅறிவிக்கப்படவில்லை.

அத்துடன், அரசு ஒருபோதும் அரச ஊழியர்களுக்கு வேதனம் வழங்குவதைத் தவிர்க்காது.

இக்கட்டான சந்தர்ப்பங்களில் வேறு செலவுகளைக் குறைத்து, அதனூடாக வேதனங்கள் வழங்கப்படும்.

தற்போது, பல அபிவிருத்தி வேலைத்திட்டங்கள்நிறுத்தப்பட்டுள்ளன. தற்போது அதற்குரிய கொடுப்பனவுகள், ஊடாகவும் மூலதன செலவுகளை குறைத்தும் அரச பணியாளர்களுக்கு வேதனம் வழங்கப்படுகின்றது. இவ்வாறு நிதி முகாமைத்துவம் செய்யப்படுகின்றது. இது தற்போதைய நெருக்கடி - என்றார்.

## அரச வங்கி..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
உயிரிழந்தவரின் மனைவியும், மனைவியின் நண்பியும் நேற்றுமுன்தினம் இரவு வேலை முடிந்து வீடு திரும்பிக் கொண்டிருந்தபோது வீட்டுக்கு அருகில் வைத்து மோட்டார் சைக்கிளில் வந்த இருவர்மனைவியுடையகைப்பையைப் பறிக்க முயன்றுள்ளனர்.

இதன்போது, உயிரிழந்த நபரான ரஷிக வினோத் தனது தந்தையுடன் மனைவி வீடு திரும்புவதற்காக வீட்டு வாசலில் காத்திருந்துள்ளார்.

மனைவியின் கைப்பையைப் பறித்த அடுத்து விநாடியில், ரஷிக வினோத்தும் தந்தையும் மோட்டார் சைக்கிளில் வந்த திருடர்களைத் தாக்கியுள்ளனர்.

இதன் காரணமாக ஏற்பட்ட தகராறில் மோட்டார் சைக்கிள் ஓட்டுநர் வினோத்தைக் கூரிய ஆயுதத்தால் வெட்டியுள்ளார்.

இந்தத் தாக்குதலில் படுகாயமடைந்த ரஷிக வினோத் மருத்துவமனைக்குக் கொண்டு சென்றபோது அவர் உயிரிழந்துள்ளார்.

இதையடுத்து குற்றவாளிகள் கைப்பைகளைப் பறித்துக்கொண்டு தப்பிச் சென்று விட்டனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

சம்பவம் தொடர்பான நீதிவான் விசாரணை கம்பஹா பிரதான நீதிவான் மஞ்சுள கருணாரத்ன முன்னிலையில் நேற்று இடம்பெற்றுள்ளது.

## இலங்கையின்..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இதன்படி வன்னி நடவடிக்கையை மேற்கொண்ட இராணுவத் தளபதிகள் ஐரோப்பாவில் உள்ள 26 நாடுகள் உட்பட மேற்குலக நாடுகளுக்கு செல்ல முடியாது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனை மீறி குறித்த 58 இராணுவ அதிகாரிகளும் 26 நாடுகள் உட்பட மேற்குலக நாடுகளுக்குச் சென்றால் கைது செய்யப்படுவார்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த இராணுவ அதிகாரிகளின் பெயர்கள் சர்வதேச சட்டம் பொருந்தும் 100 நாடுகளுக்கு ஐ.நா. மனித உரிமைகள் பேரவையால் அனுப்பப்பட்டுள்ளன எனவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதில் விடுதலைப்புலிகள் அமைப்பின் தலைவரைக் கொல்லும் நடவடிக்கையை முன்னெடுத்த இராணுவ அதிகாரி ஒருவரின் பெயரும் அடங்குகின்றது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில்இராணுவப்பணியாளர்கள் 58 பேருக்குத் தண்டனை வழங்குவது இதுவே முதல் முறை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ரவிகரன்..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மற்றும் கரைதுறைப்பற்று பலநோக்கு கூட்டுறவுச்சங்கத்தின் முன்னாள் தலைவரும் சமூகச் செயற்பாட்டாளருமான இரத்தினராசா மயூரன் உள்ளிட்ட பலருக்கு எதிராக தொல்லியல் திணைக்கள அதிகாரிகள் செய்த முறைப் பாட்டுக்கு அமைய விசாரணைகளை மேற்கொள்வதற்காக முல்லைத்தீவு பொலிஸ் நிலயம் வருமாறு அழைப்பு விடுக்கப்பட்டது.

இந்நிலையில், பொலிஸ் நிலையம் சென்ற இருவரையும் நேற்றிரவு பொலிஸார் கைது செய்திருந்தனர்.

இதனைத் தொடர்ந்து மேலும் பலரைக் கைது செய்ய முல்லைத்தீவு பொலிஸார் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர். இதேவேளை, பொலிஸாரின் நடவடிக்கைகளைக் கண்டித்து முல்லைத்தீவில் மக்கள், எதிர்ப்புப் போராட்டம் ஒன்றுக்குத் தயாராகி வருகின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## சூதாட்டத்தில்..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அதிகமாக அம்பலாங்கொடை பிரதேசத்தில் காணப்படுகின்றனர் என்று தெரியவந்ததையடுத்துப் பொலிஸார் இது குறித்து விசேட கவனம் செலுத்தியுள்ளனர்.

## பல்கலை..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
முதல் குறித்த மாணவன், காணாமல் போயிருந்த நிலையில், நேற்று மகாவலி கங்கையில் இருந்து அவரது சடலம் மீட்கப்பட்டது.

குறித்த மாணவன் உயிரிழந்தமைக்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை.

சடலம் கண்டி தேசிய வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதுடன், சம்பவம் தொடர்பில் பேராதனை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

கடந்த 16ஆம் திகதி குறித்த மாணவன் காணாமல்போனார் என்று பேராதனை பொலிஸாருக்குக் கிடைத்த முறைப்பாட்டுக்கு அமைவாக அவரைத் தேடும் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

குறித்த மாணவன் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கலைப்பீடத்தில் மனோதத்துவ துறையில் பயின்று வந்தவராவார்.

அவர் எழுதினார் என்று சந்தேகிக்கப்படும் கடிதம் ஒன்றும் அவர் தங்கியிருந்த அறையில் இருந்து கண்டு பிடிக்கப்பட்டுள்ளது என்று பேராதனை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## போதைப்பொருள்..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
வந்துவிடக்கூடாது என்தால் அது குறித்த தகவல்களை வெளிப்படுத்தாது மறைக்கின்றனர்.

இந்தச் செயல் கொலைக்குச் சமனானது. இனி இந்த விடயங்களை வெளிப்படையாகப் பேசவேண்டும். ஏனெனில் நிலைமை மோசமாகி விட்டது.

யாழ். மாவட்டத்தின் பிரபல பாடசாலையொன்றில் அண்மையில் மூன்று மாணவர்கள் மயங்கி விழுந்தனர். பரிசோதனையின்போது அவர்கள் போதைப்பொருள் பாவனைக்கு அடிமையாகியிருந்தனர்.

பின்னர் பாடசாலையின் நற் பெயரைக்கருத்தில்கொண்டு சில விடயங்கள் மூடிமறைக்கப்பட்டுவிட்டன. இந்த நிலைமை கவலையளிக்கின்றது - என்றார்.

தொடர்புகளுக்கு:-
076 443 8622






# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## திருமலையும் தீர்வும்

தமிழ்த் தேசியப் பரப்பிலே இப்போது அதிகம் பேசப்படும் – சர்ச்சையை ஏற்படுத்தியிருக்கும் – விடயம் திருகோணமலைத் தமிழ் பிரதிநிதித்துவமாகும்.

வயது மூப்பு மற்றும் தளர்வு காரணமாக ஒழுயாழுப் பணி செய்ய முழயாதிருக்கும் சம்பந்தனினால் திருகோணமலைத் தமிழர்களின் அவசர – அவசிய – அத்தியாவசிய – பணிகளைக் கவனிக்க முழயாமல் இருக்கின்றது. அதனால் தங்களது நிலைமை மோசமடைந்து வருகின்றது என்று திருகோணமலைத் தமிழர்கள் குமுறுகின்றனர். அது முற்றிலும் உண்மை. மறுக்க முழயாத உண்மை.

இந்த அடிப்படையில் சம்பந்தனை அவரது எம்.பி. பதவியை ராஜினாமாச் செய்ய வைத்து, விருப்பு வாக்குப் பட்டியலில் அடுத்த நிலையில் இருக்கும் குகதாசனை எம்.பியாக்கினால் நெருக்கடிகளைச் சமாளிக்கக் கூடியதாக இருக்கும் என்பது திருகோணமலையில் குமுறும் – சீறும் – தமிழரசுத் தரப்புகளின் கருத்து. அந்த நிலைப்பாட்டையும் தப்பு என்று கூற முழயாது.

அதற்காக தமிழரின் தேசிய தலைமைத்துவத்தை இன்று தாங்கியிருக்கும் சம்பந்தனை, பதவியை விட்டு விலகுங்கள் என்று கேட்பதா என்னும் ஒரு கேள்வி எழுகின்றது.

அத்தோடு, இப்படி ஒரு நிலைமை உருவாகும் – நெருக்கடி ஏற்படும் – என்று ஊகிக்காமல்தானா 2020 பொதுத் தேர்தலில் மூத்த தலைவர் சம்பந்தன் இறங்கினார் என்ற கேள்வியும் எழுகின்றது. அங்குதான் பதிலும் இருக்கின்றது.

கூட்டமைப்பின் பிரதான பங்காளிக் கட்சியான தமிழரசின் தலைவர் மாவை சேனாதிராசாவை வேட்பாளர் பட்டியலில் ஆறாவது இடத்துக்குத் தள்ளி தோற்கடித்திருந்தனர் யாழ். மாவட்ட மக்கள். அதே போல கட்சியின் பொதுச்செயலாளராக இருந்த துரைராஜசிங்கத்தையும் ஆறாவது இடத்துக்குத் தள்ளி தோற்கடித்தனர் மட்டக்களப்புத் தமிழரசு ஆதரவாளர்கள்.

ஆனால், ஏற்கனவே வயது போய் தளர்ந்து போயிருந்த சம்பந்தனை திருகோணமலை தமிழர்கள் தோற்கடிக்கவில்லை. தங்களுக்குக் காத்திரமாகச் செயல்படக்கூடிய ஒருவர் கட்டாயம் –அவசியம் – என்று இப்போது வலியுறுத்தும் அந்தத் தேவையை மட்டும் திருகோணமலை வாக்காளர்கள் அப்போது மனதில் கொண்டிருந்தால் சம்பந்தனைத் தள்ளி குகதாசனை திருகோணமலைத் தமிழர்கள் தேர்ந்தெடுத்து இருப்பார்கள். தேர்ந்தெடுத்திருக்க முடியும்.

அதையும் அவர்கள் செய்யவில்லை. அதற்கும் காரணமுண்டு.

தேர்தல் கால விடயங்களைப் பலரும் மறந்து விட்டனர்.

இந்தத் தேர்தலில் மீண்டும் திருகோணமலை மாவட்டத் தலைமை வேட்பாளராக நிற்கும்படி சம்பந்தன் வலியுறுத்தப்பட்ட போது, இப்படி எல்லாம் ஆகும் என மூத்த தலைவரான அவர் எதிர்பார்த்தார். ஊகித்தார். அதனால் தான் அப்போது ஒரு நிபந்தனையை விதித்தார் அவர்.

“நான் தேர்தலில் நிற்பதானால் என் வயது மூப்பு காரணமாக திருகோணை மக்களுக்கு என்னால் உரியதைச் செய்ய முடியாது இருக்கும். ஆகையினால் நான் வென்றாலும், தோற்றாலும், கூட்டமைப்பின் தேசியப் பட்டியல் உறுப்புரிமையில் முதலாவது இடத்தைத் திருகோணமலையில் குகதாசனுக்கு வழங்க வேண்டும்” – என்பதே அந்த நிபந்தனை.

அந்த நிபந்தனையை தமிழரசும் கூட்டமைப்பும் ஏற்ற பின்னர்தான் தேர்தலில் இறங்கச் சம்மதித்தார் சம்பந்தன்.

தேர்தல் முடிந்ததும் அளித்த வாக்குறுதியை – ஒப்புக்கொணட நிபந்தனையை – நிறைவு செய்யத் தவறி விட்டு, இப்போது சம்பந்தனை நோவதில் அர்த்தமும் இல்லை; நியாயமும் இல்லை.

அந்த நிபந்தனையை இப்போதாவது நிறைவு செய்ய முயற்சிப்பதுதான் திருகோணமலைத் தமிழர்களுக்கு நியாயம் செய்யும் தீர்வாக முடியும்.

# தியாக தீபம் திலீபனின் நினைவேந்தல் எழுச்சிபூர்வமாக இம்முறை இடம்பெறும்!

## முதல்வர் மணிவண்ணன் உத்தரவாதம்




தியாக தீபம் திலீபனின் நினைவேந்தல் இம்முறை எழுச்சிபூர்வமாக நடைபெறும் என யாழ். மாநகர முதல்வர் வி.மணிவண்ணன் தெரிவித்துள்ளார்.

யாழ்.ஊடக அமையத்தில் நேற்று (புதன்கிழமை) இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர் –

கடந்த காலங்களை விட இம்முறை நிலைமை சற்று சீராகக் காணப்படுவதால், தியாக தீபம் திலீபனின் நினைவேந்தலை இம்முறை எழுச்சியாக நினைவுகூருவதற்குத் தீர்மானித்துள்ளோம்.

அவர் இனத்தின் அடையாளம் என்றபடியால், அவர் மக்களுக்கு சொந்தமானவர்.

ஆகவே நினைவேந்தல் நிகழ்வுகளை கட்சி மற்றும் அமைப்புகள் சாராமல், பொதுவாக உருவாக்கப்பட்டுள்ள குழுவே இம்முறை மேற்கொள்ளும்.

நினைவேந்தல் இடம் மாநகர சபை எல்லைக்குள் இருக்கிறது. ஆகவே அதற்கான வழிமுறைகளை மாநகர சபை என்ற ரீதியில் கூறுகின்றமை சரியாக இருக்கும் என்று நம்புகின்றேன்.

நினைவு தினமன்று கவி அரங்கம் உள்ளிட்ட கலை நிகழ்வுகளை நடத்துவதற்கு நினைவேந்தல் குழு தீர்மானித்துள்ளது. அதற்கு அமைவாக நிகழ்வுகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

இது தவிர சில தரப்புக்கள் நினைவேந்தல்களை மேற்கொள்ள விட மாட்டார்கள். குழப்புவார்கள். எனவே, இம்முறையும் குழப்பம் வரலாம். அதற்கான வேலைகளை அரசு தரப்பு மேற்கொண்டுள்ளது.

கடந்த காலங்களில் உள்ள அரசு வேறு ஒரு வழியை கையாண்டது. இம்முறை உள்ள அரசு குழப்புவதற்காக கும்பல்களை ஏவி விடும் வாய்ப்புகள் உள்ளன.

இவற்றை எல்லாம் கடந்து எழுச்சியாக இந்த நினைவேந்தல் நிகழ்வுகளை மேற்கொள்ளுவோம்.– என்றார்.

# நாடாளுமன்ற உறுப்பினர்களின் பேச்சுரிமை நசுக்கப்பட்டுள்ளது!

## ஜி.எல்.பீரிஸ் வேதனை



நாட்டில் மட்டுமன்றி, நாடாளுமன்றத்தில்கூட கருத்துக்களை வெளியிடுவதை நசுக்கும் நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொண்டுள்ளதாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற வளாகத்தில் நேற்று (புதன்கிழமை) ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அவர், பதின்மூன்று நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு நாடாளுமன்றத்தில் பேசுவதற்கான உரிமையைக்கூட அரசாங்கம் வழங்கவில்லை எனக் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டின் தேசிய வருமானத்தை அதிகரிப்பதற்கான தந்திரோபாயங்கள் தொடர்பிலேயே நாடாளுமன்றத்தில் பிரதான விவாதம் இடம்பெற்றது என்றும் அந்தவிடயம் தொடர்பான கருத்துக்களை வெளியிடுவது சிந்தனையுடன் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். தமது யோசனையால் அரசாங்கம் அச்சமடைந்திருக்கலாம் எனவும் அவர் தெரிவித்துள்ளார். அடிப்படை உரிமையான பேச்சுரிமை மீறப்பட்டால் நாடாளுமன்ற உறுப்பினருக்கான சிறப்புரிமைகள் பற்றிப் பேசி பயனில்லை என்றும் இது நாடாளுமன்றத்தின் ஜனநாயகத்தை முற்றிலும் சீர்குலைக்கும் செயலாகும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக நாட்டிலும் சர்வதேச அளவிலும் மிகவும் வலுவான கருத்து உருவாக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# ‘யாழ் ஆரோக்கிய நகரத்திட்டம்’ நேற்று முதல் நடைமுறைக்கு: பாடசாலைகளை அண்டிய வீதிகள் முதற்கட்டமாகத் தெரிவு!

பொதுமக்களிடையே சைக்கிள் பாவனையை ஊக்குவிக்கும் நோக்கிலும்,வீதிவிபத்துக்களைத் தவிர்க்கும் வகையில் விழிப்புணர்வை ஏற்படுத்தும்வகையில் உலக சுகாதார ஸ்தாபனத்தின் அனுசரணை யுடன் ’யாழ் ஆரோக்கிய நகரம்’எனும் செயற்திட்டம் கடந்த ஆவணி மாதம் ஆரம்பிக்கப்பட்டது.

இந்நிலையில், இதன் முதற்கட்டமாக சைக்கிள் பாவனையை ஊக்குவிக்கும் நோக்கிலும், வீதி விபத்துகளைத் தவிர்க்கும் நோக்கிலும் பாடசாலைச் சமூகங்களை மையப்படுத்தி ஆரம்பக் கட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக யாழ்ப்பாண மாநகர முதல்வரால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு –

யாழ்.மாநகரில் இயங்குகின்ற, யாழ்ப் பாணம் இந்துக் கல்லூரி, யாழ்.இந்து ஆரம் பப் பாடசாலை ஆகியன இந்தத் திட்டத்தில் முதற்கட்டமாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளன.


இந்தவகையில் இந்தப் பாடசாலைகளை அண்மித்த பகுதிகள், ஒருவழிப் பாதையாகவும், சைக்கிள்களைப் பாவனைக்கு ஏற்ற பாதையாகவும் கொண்டுவர ஆரம்பகட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.இவை கடந்த வியாழக் கிழமை முதல் அமுலுக்கு வரும் என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது. மேலும், இந்த நடைமுறை பாடசாலை வேளைகளில் காலை 6.45– 8 மணி வரையும்,பிற்பகல் 1– 2 மணி வரையும் நடைமுறைப்படுத்தப்படும் எனவும் தெரி விக்கப்பட்டுள்ளது.

இந்த நடைமுறைக்கென சில வீதி விதிமுறைகள் வழங்கப்பட்டுள்ளன. அந்தவகை யில்– கஸ்தூரியார் வீதி ஒருவழிப்பாதையாகக் கொண்டு வரப்படுவதாகவும், கே.கே.எஸ் வீதியிலிருந்து கல்லூரி வீதியின் சுற்றுச் சந்திவரையிலான பாதை ஒருவழிப்பாதையாகக் கொண்டுவரப்படுதாகவும், கல்லூரி ஒழுங்கை வெறுமனே சைக்கிள் பாவனைக்காக ஒதுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள் ள துடன், இவ் விதிமுறைகளைப் பின்பற்றுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. மேலும், இந்த நடைமுறைகளைக் கவனிப்பதற்கு பொலிஸார்,தன்னார்வலர்கள், பாடசாலைச் சமூகத் தினர் மக்களுக்கு வழிகாட்டியாக இருப்பார்கள் எனவும், நடைமுறைகள் தொடர்பிலான தெளிவான விளக்கங்கள், வீதி வழிமுறைகள் உள்ளடங்கிய பதாதைகள் குறிப்பிட்ட வீதிகளில் இன்று முதல் காட்சிப்படுத்தப்படும் எனவும் முதல்வரின் ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டம், பாதுகாப்புமிக்க வீதிகளை பாடசாலைச் சமூகத்துக்கும், பொதுமக்களுக்கும் ஏற்படுத்திக் கொடுப் பதை நோக்கமாக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு

வியாழக்கிழமை 22.09.2022

# அணுகுண்டு வீசவும் தயங்கேன் ரஷ்ய அதிபர் புடின் எச்சரிக்கை



## மூன்று லட்சம் இராணுவ வீரர்களை படைக்குத் திரட்டுகின்றது அந்நாடு



மாஸ்கோ, செப்.22

உக்ரைன் மீதான போர் ஆரம்பித்து, ஏழு மாதங்கள் எட்டியுள்ள நிலையில், தன் இராணுவத்துக்கு, மேலும் மூன்று லட்சம் வீரர்களை திரட்டுகிறது ரஷ்யா. இந் நிலையில், நேற்று தொலைக்காட்சி வாயிலாக, நாட்டு மக்களிடையே பேசிய ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடின், மேற்கத்திய நாடுகளுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

கிழக்கு ஐரோப்பிய நாடான உக்ரைன் மீது, ரஷ்யா கடந்த பெப்ரவரி 25 இல்போர் தொடுத்தது. தற்போது, போர் ஏழு மாதங்களை எட்டியுள்ள நிலையிலும், அது நீடித்து வருகிறது. இதற்கிடையே ரஷ்யப் படைகளுக்கு எதிராக, உக்ரைன் இராணுவம் கடும் எதிர் தாக்குதல் நடத்தி வருகிறது.

இந்நிலையில், போரை தீவிரப்படுத்தும் வகையில், உக்ரைனின் கிழக்கு மற்றும் தெற்கே உள்ள டொனெட்ஸ்க், லுஹான்ஸ்க் பகுதிகளை ரஷ்ய நாட்டுடன் இணைக்க ரஷ்யா திட்டமிட்டு உள்ளது. இதற்காக, இந்தப் பிராந்தியங்களில் மக்களின் கருத்துகளை கேட்பதற்காக, ஓட்டெடுப்பு நடக்க உள்ளது.ரஷ்யாவின் இந்த முயற்சிக்கு, அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் நடக்கும், ஐ.நா. பொது சபைக் கூட்டத்தில் கடும் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், தொலைக்காட்சி வாயிலாக நாட்டு மக்களிடையே நேற்று ஆற்றிய உரையில், விளாடிமிர் புடின் கூறியதாவது:

"நான் உளறவில்லை. தேவைப்பட்டால் அணு குண்டுகளை பயன்படுத்த தயங்க மாட்டேன். உக்ரைன் விவகாரத்தில் அமெரிக்கா உள்ளிட்ட மேற்கத்திய நாடுகள் எல்லை மீறி செயல்பட்டு வருகின்றன. ரஷ்யாவிடம் அனைத்து வகையான ஆயுதங்கள் உள்ளன. அவை நேடோ வைத்திருக்கும் ஆயுதங்களை விட நவீனரகம் வாய்ந்தவை. நமது நாட்டின் பிராந்திய ஒற்றுமைக்கு ஏற்பட்ட அச்சுறுத்தல் மற்றும் மக்களையும், நாட்டையும் பாதுகாப்பதற்கு நம்மிடம் உள்ள அனைத்து ஆயுதங்களையும் பயன்படுத்துவோம். இது மிரட்டலை உதாசீனப்படுத்த வேண்டாம்.

"எங்களுக்கு அணுஆயுத மிரட்டல் விடும் அனைவரும், நிலைமை எப்போது வேண்டுமானாலும் மாறும் என்பதை தெரிந்து கொள்ள வேண்டும். ரஷ்யர்கள் அதிகம் வசிக்கும் டான்பாஸ் பிராந்தியத்தை உக்ரைன் கட்டுப்பாட்டில் இருந்து விடுவிப்பதே இந்த போரின் நோக்கம் ஆகும்." - என்று நேற்று அவர் எச்சரிக்கைவிடுத்தார்.

இதனால், பரபரப்பு ஏற்பட்டுள்ளது. அதே நேரம், தனது நாட்டின் மீது ரஷ்யா அணு ஆயுதம் பயன்படுத்துவதை உலக நாடுகள் அனுமதிக்காது என்று உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கி கூறியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# ரஷ்யாவைத் தண்டியுங்கள்!

## ஐ.நாவில் உக்ரைன் தலைவர் மன்றாட்டம்



நியூயார்க்,செப்.22

ஐ.நா.பொதுச் சபை கூட்டத்தில் உலகத் தலைவர்கள் மத்தியில் உக்ரைன் அதிபர் ஜெலென்ஸ்கி காணொலி மூலம் உரையாற்றினார். ஐ.நா.பொதுச் சபையில் உலகத் தலைவர்களின் வருடாந்திர கூட்டம் செப்டம்பர் 21 ஆம் திகதி (நேற்று முன்தினம்) நடைபெற்றது. இந்த உயர்மட்ட ஐ.நா. கூட்டத்தில் உலகத் தலைவர்கள் மத்தியில், உக்ரைன் அதிபர் ஜெலென்ஸ்கி காணொலி மூலம் உரையாற்றினார். முன்னதாக, ஐ.நா.பொதுச் சபையில் 2 ஆண்டுகளுக்கு பின் உலகத் தலைவர்கள் நேரடியாக கலந்துகொண்டனர். ரஷ்யாவின் படையெடுப்பால் பாதிக்கப்பட்டுள்ள உக்ரைனின் அதிபர் ஜெலென்ஸ்கி காணொலி மூலம் தோன்றியதும், அவர் சபையில் இருந்தவர்களின் கைத்தட்டலைப் பெற்றார். இந்தக் கூட்டத்தில், உக்ரைன் அதிபர் ஜெலென்ஸ்கி பேசி, பதிவு செய்யப்பட்ட வீடியோ ஒளிபரப்பானது.

அதில் அவர் பேசியிருப்பதாவது:-

உக்ரைனில் பல்லாயிரக்கணக்கான மக்களைக் கொலை செய்த குற்றங்கள், பெண்கள் மற்றும் ஆண்களை சித்திரவதை மற்றும் அவமானப்படுத்திய குற்றங்கள் ஆகியவற்றுக்கான தண்டனை ரஷ்யாவிற்கு ஐக்கிய நாடுகள் சபையால் வழங்கப்பட வேண்டும். ரச்யாவிற்கு எதிராக ஒரு சிறப்பு நீதிமன்றத்தை நிறுவ வேண்டும். இந்த நடவடிக்கை அனைத்து ஆக்கிரமிப்பாளர்களுக்கும் ஒரு சமிக்ஞையாக இருக்கும். ரஷ்யா இந்த போருக்கு அதன் சொந்த சொத்துக்களைக் கொண்டு இழப்பீட்டு தொகை கொடுக்க வேண்டும். போர் நிறுத்தம் தொடர்பான உண்மையான பேச்சுவார்த்தைகளுக்கு ரஷ்யா பயப்படுகிறது. ஆக்கிரமிப்பாளர்களுக்கும் பயங்கரவாதிகளுக்கும் பொய் சொல்வது பொதுவானது. அதை போல ரஷ்யா அனைவரிடமும் பொய் சொல்கிறது. - இவ்வாறு அவர் கூறினார்.

# இங்கிலாந்தில் இந்துக்ளின் கோவிலை முற்றுகையிட்டு முஸ்லிம்கள் போராட்டம்

லண்டன், செப்.22

இங்கிலாந்தின் வெஸ்ட் மிட்லாண்ட்டில் உள்ள ஸ்மெத்விக் நகரில் இருக்கும் துர்கா கோயிலை 200க்கும் மேற்பட்ட முஸ்லம்கள் முற்றுகையிட்டு போராட்டம் நடத்தியமையால் பரபரப்பு ஏற்பட்டது.

துபாயில் நடந்த ஆசிய கோப்பை கிரிக்கெட் போட்டிக்கு பின்னர், ரசிகர்கள் மத்தியில் மோதல் ஏற்பட்டது.

இதனால், லீசெஸ்டர்யைரில் அமைந்துள்ள இந்து கோவிலில் காவிக்கொடி கிழிக்கப்பட்டதால் வன்முறை ஏற்பட்டது. இதனால், அங்குபொலிஸார் குவிக்கப்பட்டு நிலைமையை கட்டுக்குள் கொண்டு வரப்பட்டது.

இந்தச் சம்பவத்திற்கு இந்தியத் தூதரகம் கடும் கண்டனம் தெரிவித்திருந்தது.

இந்நிலையில், இந்தியாவை சேர்ந்த பெண் துறவி சாத்வி ரிதம்பரா, ஸ்மெத்விக் நகரில் அமைந்துள்ள துர்கா கோவிலுக்க வருவதாக இருந்தது. ஆனால், உடல் நலக்குறைவு காரணமாக அவரது வருகை ஒத்திவைக்கப்பட்டது. சாத்வி ரிதம்பரா வருகைக்கு எதிர்ப்பு தெரிவித்து துர்கா கோவிலை முற்றுகையிட்டு போராட்டம் நடத்த வரும்படி சமூக வலைதளம் மூலம் அழைப்பு விடுக்கப்பட்டது.

இதனால், 200க்கும் மேற்பட்டோர் அங்கு குவிந்தனர். அவர்களில் பெரும்பாலானவர்கள் முஸ்லிம்கள். போராட்டத்தில் ஈடுபட்டவர்கள், 'அல்லாஹு அக்பர்' எனக் கோம் போட்டனர். தகவல் அறிந்து அங்கு வந்த பொலிஸார், அவர்களை அப்புறப்படுத்த முயன்றனர். கோவிலுக்குள் போத்தல் வீசப்பட்டதுடன், பட்டாசுகளை வெடிக்க செய்து, கோவிலுக்குள் வீசியவர்கள், கோவில் நிர்வாகிகளுக்கு மிரட்டல் விடுத்தனர் எனவும் தெரிகிறது.

அப்போது, சிலர் கோவில் சுவர் மீது ஏற முயன்றுள்ளனர். அவர்களை பொலிஸார் தடுத்து அங்கிருந்து அப்புறப்படுத்தினர். இதனால், அந்த பகுதியில் பரபரப்பு ஏற்பட்டது.



# தீவிர இஸ்லாமியப் போக்கு அமைப்பின் பிரமுகர்கள் வீடுகளில் அதிரடிப் பாய்ச்சல்

## பத்து மாநிலங்களில் ஒரே சமயத்தில் தேடுதல்,சோதனை







சென்னை,செப்.22

தீவிர இஸ்லாமியப் போக்கு அமைப்பான Popular Front of India (பி.எவ்.ஐ.) அமைப்பின் அலுவலகங்கள் மற்றும் தலைவர்களின் வீடுகளில் நேற்றிரவு முதல் சோதனை நடத்தப்படுகிறது. கேரள மாநிலம் மலப்புரம் மாவட்டம் மஞ்சேரியில் பொப்பியுலர் பிரண்ட் ஒவ் இந்தியா(பி.எவ்.ஐ.) தலைவர் ஓ.எம்.ஏ சலாம் வீடு உட்பட பி.எவ்.ஐ. அமைப்பின் மாநில, மாவட்ட அளவிலான தலைவர்களின் வீடுகளில் தேசிய புலனாய்வு முகமை (என்.ஐ.ஏ.) மற்றும் அமலாக்கத்துறை அதிகாரிகள் தீவிர சோதனை நடத்தி வருகின்றனர்.

மேலும், தமிழ்நாட்டில் கோயம்புத்தூர், கடலூர், ராமநாதபுரம், திண்டுக்கல், தேனி, தென்காசி உள்ளிட்ட பல இடங்களில் பி.எவ்.ஐ. அலுவலகங்கள் மற்றும் தலைவர்களின் வீடுகளில் சோதனை நடத்தப்படுகிறது. சென்னை புரசைவாக்கத்தில் உள்ள பி.எவ்.ஐ. மாநிலத் தலைமை அலுவலகத்திலும் என்.ஐ.ஏ. சோதனை நடத்தப்படுகிறது. பி.எவ்.ஐ. அமைப்பின் அலுவலகங்களில் நள்ளிரவு முதல் விடிய விடிய சோதனை நடைபெறுகிறது.

இந்நிலையில், இதனை கண்டித்து பி.எவ்.ஐ. கட்சித் தொண்டர்கள் போராட்டம் நடத்தினர். பயங்கரவாதத்திற்கு நிதியுதவி செய்தல், பயிற்சி முகாம்களை ஏற்பாடு செய்தல் மற்றும் தடைசெய்யப்பட்ட அமைப்புகளில் சே மக்களை ஊக்குவித்தல் போன்றவற்றில் ஈடுபட்டுள்ள நபர்களின் குடியிருப்பு மற்றும் அலுவலக வளாகங்களில் தேசிய புலனாய்வு முகமையின் இந்த சோதனை நடத்தப்படுகிறது.

தமிழ்நாடு, கேரளா,கர்நாடகா என 10 மாநிலங்களில் மேற்கொள்ளப்பட்டு வரும் முக்கிய நடவடிக்கையில் என்.ஐ.ஏ. அமுலாக்கத்துறை மற்றும் மாநில காவல் துறை இணைந்து நூறுக்கும் மேற்பட்ட பி.எவ்.ஐ உறுப்பினர்களை கைது செய்துள்ளது.

## 2026 இல் லட்சாதிபதிகளின் எண்ணிக்கை இந்தியாவில் இரண்டு மடங்காக உயருமாம்




புதுடெல்லி,செப்.23

உலகம் முழுவதும் பொருளாதார மந்தநிலை காரணமாக தொழில் வளர்ச்சி முடங்கியது. கொரோனா பிரச்சினை முடிவுக்கு வந்த பின்னர் மீண்டும் தொழில் வளர்ச்சி ஏற்பட்டது.

இதனால் பொருளாதார மந்தநிலை விலகி, வருவாய் உயர தொடங்கியது. இதன் அடிப்படையில் அதிக லாபம் ஈட்டிய நிறுவனங்கள் மற்றும் அதன் உரிமையாளர்கள் குறித்த தகவல்களை ஆய்வு நிறுவனம் ஒன்று திரட்டியது.

இதில் வளர்ந்த நாடுகளை காட்டிலும், வளரும் நாடுகளில் தொழில் லாபம் ஈட்டியவர்கள் எண்ணிக்கை அதிகரித்து இருப்பது தெரியவந்தது.

இந்தியாவில் கடந்த 2021 ஆம் ஆண்டு லட்சாதிபதிகள் எண்ணிக்கை 7 லட்சத்து 96 ஆயிரமாக இருந்தது. இப்போது லட்சாதிபதிகள் எண்ணிக்கை மேலும் அதிகரித்து வருகிறது. இந்த உயர்வு இதே நிலையில் நீடித்தால் வருகிற 2026 ஆம் ஆண்டு இந்தியாவில் லட்சாதிபதிகளின் எண்ணிக்கை சுமார் 16 லட்சமாக அதிகரிக்கும் என்று கூறப்பட்டுள்ளது.

அதாவது 2021 ஆம் ஆண்டை விட இந்த எண்ணிக்கை 2 மடங்கு அதிகமாக இருக்கும்.

இதுபோல உலக அளவில் முதல் 10 பணக்காரர்கள் வசமே 82 சதவீத சொத்துக்கள் உள்ளன. உலக பணக்காரர்கள் பட்டியலில் இப்போதும் அமெரிக்காவும், சீனாவும் மட்டுமே அதிக எண்ணிக்கையில் இடம் பிடித்து உள்ளன. வரும் காலங்களில் இந்த எண்ணிக்கை மாறுவதற்கான வாய்ப்புகள் உள்ளதாக ஆய்வில் தெரியவந்துள்ளது.

## இந்திய உச்சநீதிமன்ற விசாரணைகள் இனிமேல் நேரடியாக ஒளிபரப்பப்படும்



புதுடெல்லி,செப்.22

இந்திய உச்சநீதிமன்றத்தின் (சுப்ரீம் கோர்ட்) விசாரணைகளை வரும் 27ந் தேதி முதல் நேரடி ஒளிபரப்பு செய்வது என முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

உச்சநீதிமன்றத்தின் தலைமை நீதிபதியாக யு.யு.லலித் கடந்த 27 ஆம் திகதி பதவி ஏற்றார். அவர் பதவி ஏற்ற மறுநாளிலேயே 25 அரசியல் சாசன அமர்வுகளை அமைத்தமை நினைவுகூரத்தக்கது. இந்த நிலையில், நேற்று முன்தினம் மதியம் தலைமை நீதிபதி யு.யு.லலித் தலைமையில் நீதிபதிகள் கூட்டம் நடைபெற்றது. அதில், உச்ச நீதிமன்றத்தில் வழக்கு விசாரணைகளை வரும் 27 ஆம் திகதி முதல் நேரடி ஒளிபரப்பு செய்வது என முடிவு எடுக்கப்பட்டது. ஒரு மனதாக எடுக்கப்பட்ட இந்த முடிவின்படி, முதலில் யூ டியூப் சேனலில் வழக்கு விசாரணைகள் நேரடியாக ஒளிபரப்பப்படும். மேலும், 5 நீதிபதிகளைக் கொண்ட அரசியல் சாசன அமர்வு முன் நடைபெறுகிற சில குறிப்பிட்ட வழக்குகள் அல்லது அரசியல் சாசனம் மற்றும் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த வழக்குகளின் விசாரணைகள் முன்னோடி திட்டமாக நேரடியாக ஒளிபரப்பப்படும் என தகவல் அறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அரசியல்சாசன அமர்வு முன் நடைபெறும் விசாரணையை நேரலை செய்யக்கோ உச்சநீதிமன்றத்தின் தலைமை நீதிபதி யு.யு.லலித் துக்கு மூத்த வக்கீல் இந்திரா ஜெய்சிங் சமீபத்தில் கடிதம் எழுதியிருந்தமை நினைவுகூரத்தக்கது நேரடி ஒளிபரப்புக்காக சம்பந்தப்பட்ட நீதிமன்ற முதலில் எழுத்துபூர்வமாக தெரிவித்து அனுமதி பெற்று உரிய நடைமுறைப்படி உறுதி செய்து கொள்ள வேண்டும் என தகவல்கள் கூறுகின்றன 2018ம் ஆண்டு உச்சநீதிமன்றம் அளித்த ஒரு தீர்ப்பில், வழக்கு விசாரணைகள் நேரடியாக ஒளிபரப்பப்பட வேண்டும் என்று கூறியதை அமல்படுத்துவதற்கான முதல் படி இது என்று நீதிபதிகள் ஒருமித்த கருத்தை வெளியிட்டுள்ளனர்.

## மும்பையில் ரூ.1,725 கோடி பெறுமதிக்கு 22 ஆயிரம் கிலோ ஹெராயின் சிக்கியது

மும்பை,செப்.22

மும்பை நவசேவா துறைமுகத்தில் இருந்து மிகப்பெரிய அளவில் ஹெராயின் கடத்த இருப்பதாக டெல்லி பொலிஸின் சிறப்பு பிரிவுக்கு இரகசியத் தகவல் கிடைத்தது. இதைத் தொடர்ந்து டெல்லி சிறப்பு பிரிவு பொலிஸார் மும்பை நவசேவா துறைமுகத்துக்கு சென்று அதிரடி சோதனையில் ஈடுபட்டனர். இந்த சோதனையின்போது கெண்டெய்னரில் ஹெராயின் கடத்தப்பட இருந்ததை அவர்கள் கண்டறிந்தனர்.

இதைத் தொடர்ந்து கெண்டெய்னரில் இருந்த ஹெராயினை டெல்லி சிறப்பு பிரிவு பொலிஸார் பறிமுதல் செய்தனர். மொத்தம் 22 ஆயிரம் கிலோ ஹெராயின் சிக்கியது. இதன் மதிப்பு இந்தியப் பணத்தில் ரூ.1,725 கோடியாகும்.

சமீப காலத்தில் இவ்வளவு பெரிய தொகைக்கு ஹெராயின் பறிமுதல் செய்யப்படவில்லை. வழக்கமாக குஜராத் மாநிலத்தில்தான் போதை பொருள் பிடிபடுவது வழக்கம்.

தற்போது மும்பையில் ரூ.1,725 கோடி பெறுமதிக்கு ஹெராயின் பறிமுதல் செய்யப்பட்டு உள்ளது. இதுகுறித்து பொலிஸாரும், போதை பொருள் தடுப்பு அதிகாரிகளும் தீவிர விசாரணை மேற்கொண்டு வருகிறார்கள்



காலைக்கதிர்
Kalaikkathir மாலைப்பதிப்பு



# திருமலைத் துறைமுகத்திலிருந்து மீண்டும் ஏற்றுமதி நடவடிக்கைகள்





சுமார் மூன்று தசாப்தங்களின் பின்னர் திருகோண மலை துறைமுகம் தனது ஏற்றுமதி நடவடிக்கைகளை ஆரம்பித் துள்ளது.

புல்மோட்டை கனிய மணல் லிமிடெட் நிறுவனத் துக்குச் சொந்தமான கனிய மணல் சீனாவுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது.

திருகோணமலைத் துறைமுகத்தின் ஏற்றுமதி நடவடிக்கைகள் எழுபதுகளின் இறுதிப் பாதிக்குப் பின்னர் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கடந்தகாலங்களில், அதன்ஏற்றுமதிநடவடிக்கைகள் நிறுத்தப்பட்டு, இறக்குமதி நடவடிக்கைகளுக்கு மட்டும் அத்துறைமுகம் மட்டுப்படுத்தப்பட்டது.

சுமார் இருபது ஆண்டுகளுக்கு முன்னர், புல் மோட்டை கடலில் நங்கூரமிட்டிருந்த டெல்டா ஸ்டார் கப்பல் வெடி வைத்து மூழ்கடிக்கப்பட்டதை அடுத்து, திருகோண மலையிலிருந்து பெருமளவிலான கனிய மணல் ஏற்றுமதி நிறுத்தப்பட்டது.

எவ்வாறாயினும், நாட்டில் நிலவும் டொலர் தட்டுப் பாட்டுக்கு நிவர்த்தியாகவும், திருகோணமலை துறைமுகத்தின் செயற்பாடுகளை அதிகரிக்கும் நோக்கிலும் திருகோணமலை துறைமுகத்தினால் ஏற்றுமதி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என கைத்தொழில் அமைச்சின் செயலாளர் தயாரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

திருகோணமலை துறைமுகத்தின் வதிவிட முகாமை யாளர் சமன் பெரேராவும் இது குறித்து கருத்துத் தெரிவித்தார்.

# அருட்தந்தை சந்திரா பெர்னாண்டோ நினைவு நிகழ்வு மட்டக்களப்பு நகரில்










1988ஆம் ஆண்டு படுகொலை செய்யப்பட்ட அருட்தந்தை சந்திரா பெர்னாண்டோவின் குருத்துவ பட்டாபிசேக விழாவின் 50ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு மட்டக்களப்பு ம றைமாவட்ட பேராலயத்தில் ஆன்ம சாந்திக்கான திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு புனித மரியாள் பேராலய வளாகத்தில் அமைந்துள்ள அவரின் சமாதியில் அஞ்சலியும் செலுத்தப்பட்டது.

அருட்தந்தை அருட்தந்தை ஏ.ஜேசுதாசன் அவர்களின் தலைமையில் நேற்று முற்பகல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டது. இந்தச் விசேட திருப்பலியானது மட்டக்களப்பு மாவட்ட நல் லிணக்க சமாதானத்துக்கான பல்சமய ஒன்றியத்தின்ஏற்பாட்டில்ஏற்பாடுசெய்யப்பட்டது.

1988ஆம் ஆண்டு ஜுன் மாதம் 06ஆம் தி கதி இந்திய இராணுவத்துடன் இணைந்து செயற்பட்ட ஆயுதக்குழு ஒன்றினால் மட்டக் களப்பு புனித மரியால் பேராலயத்தில் வைத்து மனித உரிமை செயற்பாட்டாளர் அருட்தந்தை சந்திரா பெர்னாண்டோ சுட்டுக்கொல்லப்பட்டி ருந்தார்.

நேற்றைய நிகழ்வுகளில், மட்டக்களப்பு மாவட்ட பல்சமய ஒன்றியத்தின் தலைவர், செயலாளர், உறுப்பினர்கள், மற்றும் அருட் தந்தைசந்திராபெர்னாண்டோவின்சகோதரர்கள், உறவினர்கள், என பலர் கலந்துகொண்டனர்.

சமாதியில் அஞ்சலி செலுத்தப்பட்டதுடன் அன்னாரின் திருவுருவப்படத்திற்கு மாலை அணிவிக்கப்பட்டு ஈகச்சுடர் ஏற்றப்பட்டு, அஞ்சலி நிகழ்வும் நடைபெற்றது.

தமிழ்த்தேசிய விடுதலைப் போராட்டம் இலக்கு நோக்கி பயணிக்க ஆரம்பித்த காலத்தில், ஆக்கிரமிப்புப் படையினரால் மக்கள் அழிக்கப் பட்டார்கள், சுற்றிவளைப்புக்கள், கைது செய்து விசாரணையின்றி அடைத்து வைத்தல் போன்ற பல்வேறு மக்களின் துன்ப துயரங்க ளிற்கு மத்தி யில் அருட்தந்தை சந்திரா பெர்னாண்டோ துணிந்து களமிறங்கி சேவை செய்துள்ளார்.

அவர் தமிழ்த் தேசிய விடுதலையை உள்ளு ணர்வோடு நேசித்தமையால் தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டத்தையும் ஏற்றுக் கொண் டவராக காணப்பட்டார்.

மட்டக்களப்பில் அவ்வேளையில் உருவாக் கப்பட்ட மக்கள் அமைப்பு பலம்பொருந்தியதாக வும், அனைத்து விடயங்களிலும் தகமைசார் செயற்பாட்டாளர்களை கொண்டிருந்ததற்கும் வணபிதா சந்திரா பெர்னாண்டோ, அதிபர் வண சிங்க போன்ற தன்னலமற்ற உன்னத மனிதர்க ளின் செயற்பாடுகளே காரணமென போற்றப் படுகின்றது.







# கல்முனை மாநகர சபையில் ராணிக்கு அஞ்சலி நிகழ்வு

(பாறுக் ஷிஹான்)

பிரிட்டிஷ் மகாராணி எலிசபெத் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்து கல்முனை மாநகர சபையில் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டுள்ளது.

கல்முனை மாநகர சபையின் 54ஆவது மாதாந்த பொதுச் சபை அமர்வு கடந்த செவ்வாய்க்கிழமை பிற்பகல், மாநகர முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம்.றகீப் தலைமையில் நடைபெற்றபோதே இந்நிகழ்வு இடம்பெற்றது.

சபை அமர்வின் ஆரம்பத்தில் பிரிட்டிஷ் மகாராணி எலிசபெத் மறைவுக்கு இரங்கல் தெரிவித்த முதல்வர், எலிசபெத் அவர்களின் சிறப்பியல்புகள் பற்றியும் எடுத்துக் கூறினார். அத்துடன் அவருக்கு மரியாதை செலுத்தும் பொருட்டு அனைத்து உறுப்பினர்களும் எழுந்து நின்று 02 நிமிட மௌன அஞ்சலி செலுத்தினர்.

அதுபோல் கல்முனை மாநகர சபையின் மறைந்த உறுப்பினர் புவனேஸ்வரி விநாயகமூர்த்தி அவர்களுக்கும் இதன்போது 02 நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

காலைக்கதிர்
Kalaikkathir மாலைப்பதிப்பு


# லண்டனில் பௌத்த விகாரையில் வழிபாடுகளில் ஈடுபட்ட ஜனாதிபதி!




பிரித்தானியாவின் இரண்டாம் எலிசபெத் மகாராணியின் இறுதிச் கிரியையில் கலந்து கொள்வதற்காக லண்டனுக்கு விஜயம் செய்திருந்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, லண்டனில் உள்ள பௌத்த விகாரைக்கு செவ்வாய்க்கிழமை பிற்பகல் சென்று மத வழிபாடுகளில் ஈடுபட்டார் என ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

அதனைத் தொடர்ந்து பிரித்தானியாவின் பிரதம சங்கநாயக்கர் கலாநிதி போகொட சீல விமல தேரரை சந்தித்த ஜனாதிபதி, அவரிடம் நலம் விசாரித்ததோடு, சுமூக கலந்துரையாடல் ஒன்றையும் நடத்தினார்.

இதன்போது ஜனாதிபதிக்காக மத வழிபாடு நடத்தப்பட்டு ஆசி வழங்கப்பட்டதாகவும் ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு கூறியுள்ளது.

# 1000 ரூபா சம்பளத்தை வழங்குமாறு தோட்ட தொழிலாளர்கள் போராட்டம்!

மஸ்கெலியா பெருந்தோட்ட கம்பனிக்குச் சொந்தமான மஸ்கெலியா பிரவுன்ஸ்வீக் தோட்ட தொழிலாளர்கள் தங்களுக்கு அங்கீகரிக்கப்பட்ட நாளாந்த சம்பளம் 1000 ரூபாவை உடனடியாக வழங்குமாறு கோரி நேற்று (புதன்கிழமை) தேயிலை தொழிற்சாலைக்கு முன்பாக எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

பிரவுன்ஸ்வீக் தேயிலைத் தோட்டங்களின் 7 பிரிவுகளைச் சேர்ந்த தோட்டத் தொழிலாளர்கள் கட்சி பேதமின்றி இந்தப் போராட்டத்தில் கலந்துகொண்டனர்.

இலங்கையில் 22 தோட்டக் கம்பனிகள் உள்ளன எனவும், அதில் மஸ்கெலியா பெருந்தோட்டக் கம்பனி மாத்திரம் 1000 ரூபா கொடுப்பதில்லை எனவும் தெரிவித்தனர். அத்தோடு, நீதிமன்றத்தின் தீர்ப்பையும் மீறி தற்போது பொருளாதார நெருக்கடியால் தவிக்கும் தோட்டத் தொழிலாளர்களை மஸ்கெலியா பெருந்தோட்ட நிறுவனம் பாதாளத்துக்குத் தள்ளியுள்ளது.

ஒரு கிலோகிறாம் மாவின் தற்போதைய விலை 400 ரூபா எனவும், மூன்று வேளை மாவு உணவை உண்ணும் தோட்டத் தொழிலாளர்கள் எவ்வாறு 200 ரூபா முதல் 300 ரூபா வரை சம்பளம் பெற்று வாழ்வார்கள் எனவும் தோட்டத் தொழிலாளர்கள் தெரிவித்தனர். தோட்ட உரிமையாளர்களால் அங்கீகரிக்கப்பட்ட 1000 ரூபாவை மஸ்கெலியா பெருந்தோட்ட கம்பனிக்கு மாத்திரம் வழங்க முடியாவிட்டால் வேறு நிறுவனத்திடம் வழங்குமாறு கோரிக்கை விடுப்பதாகவும் தமது கோரிக்கைகள் நிறைவேற்றப்படும் வரை போராட்டத்தை தொடரவுள்ளதாகவும் தொழிலாளர்கள் தெரிவித்தனர்.

இந்தப் போராட்டத்தில் சுமார் 400 இற்கும் மேற்பட்ட தோட்டத் தொழிலாளர்கள் கலந்துகொண்டதுடன், போராட்டத்தின் பின்னர் தோட்டத் தொழிலாளர்கள் வழமை போன்று தமது அன்றாட சேவைகளில் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடதக்கது.



# சுன்னாகம் லயன்ஸ் கழகப் பதவியேற்பில் பல குடும்பங்களுக்கு உலருணவு பொதி!




சுன்னாகம் லயன்ஸ் கழகத்தின் பதவியேற்பு நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை கந்தரோடையிலுள்ள அமரர் லயன் மகாதேவாவின் இல்லத்தில் நடைபெற்றது.

மற்ற சேவையாளர்களான அமரர்களான லயன் மகாதேவா – லயன் பூமாதேவி தம்பதிகளின் ஞாபகார்த்தமாகக் கந்தரோடை, தையிட்டி மற்றும் அளவெட்டி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மிகவும் பொரு ளாதார நிலையில் பின்தங்கிய 8 குடும்பங்களுக்கு உலருணவுப் பொதிகளும் இரண்டு மாணவர்களுக்குக் கற்றல் உபகரணங்களும் வழங்கிவைக்கப்பட்டன.

இதற்கான அனுசரணையைத் தனது தாய் – தந்தையரின் நினைவாக லயன் ம.பிரிதுவிராஜ் வழங்கியிருந்தார்.

சுன்னாகம் லயன்ஸ் கழகத்தின் ஒவ்வொரு வருடமும் புதிய நிர்வாகத் தெரிவின்போது லயன் மகாதேவா – லயன் பூமாதேவி ஞாபகார்த்தமாக இவ்வாறு பல குடும்பங்களுக்கு உலருணவுப் பொதிகள் வழங்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# இறக்காமத்தில் பெண் தலைமைத்துவ குடும்பங்களைவலுவூட்டும்செயலமர்வு






(நூருல் ஹுதா உமர்)

இஸ்லாமிக் ரிலீப் நிறுவனத்தினால் 'விதவைகள் மற்றும் பெண் தலைமைத்துவக் குடும்பங்களை நிலைபேறான வாழ்வாதாரத் திட்டங்கள் மூலம் மேம்படுத்துதல்' எனும் கருப்பொருளின் கீழ் தெரிவு செய்யப்பட்டு, வாழ்வாதாரம் வழங்கப்பட்ட குடும்பங்களின் சுயதொழில் முயற்சிகளை வலுவூட்டுவதற்கான பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இத்தொடரில், இரண்டாம் கட்ட செயலமர்வு இஸ்லாமிக் ரிலீப் நிறுவனத்தின் நிகழ்ச்சித்திட்ட உத்தியோகத்தர் எம்.எஸ். சுபுஹானின் நெறிப்படுத்தலில் இறக்காமம் பிரதேச செயலாளர் எம்.எஸ்.எம். ரஷான் (நளீமி) தலைமையில் கடந்த செவ்வாய்க்கிழமை பிரதேச செயலக கூட்ட மண்டபத்தில் இடம்பெற்றது.

இறக்காமம் பிரதேச செயலகப் பிரிவில் தெரிவு செய்யப்பட்ட பெண்கள் தலைமைதாங்கும் குடும்பங்களைப் பொருளாதார ரீதியாக அவர்களின் சுயதொழில் முயற்சிகளை ஊக்குவித்து மேலும் வலுவூட்டுவதன் மூலம் நிலைபேறான வாழ்வாதாரத்தை ஏற்படுத்தும் நோக்கத்தோடு இச் செயலமர்வு ஏற்பாடு செய்யப்பட்டது.

இச்செயலமர்விற்கு வளவாளர்களாக கலந்து கொண்ட பிரதேச செயலாளர் எம்.எஸ்.எம். ரஷான் 'தலைமைத்துவம் மற்றும் தலைமைத்துவ ஆற்றலை வளர்ப்பதற்கான பயிற்சிகள் மற்றும் வியாபார உக்திகள், குழுச் செயற்பாடு, சேமிப்பு ஏன் முக்கியம், சவால்களை வெற்றி கொள்ளுதல்' என்பன பற்றிய விரிவுரையை நிகழ்த்தினார்.

உதவி பிரதேச செயலாளர் எம்.ஏ.சி. அஹமட் நஸீல் சிறந்த தொடர்பாடல் திறன்களை வளர்த்துக் கொள்ளல், நேர் சிந்தனையூடாக சவால்களை எதிர்கொள்ளலும் மகிழ்ச்சிகரமான வாழ்க்கையும்' எனும் தலைப்பின் கீழ் விரிவுரை நிகழ்த்தினார்.

பெண்கள் மற்றும் சிறுவர் அபிவிருத்திப் பிரிவின் பெண்கள் அபிவிருத்தி வெளிக்கள உத்தியோகத்தர் ஆர்.எஸ். றிம்ஸியா ஜஹான், சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தர் எஸ். சபறுல் ஹஸீனா, உளவளத்துணை உத்தியோகத்தர் ஏ.எச்.றகீப் மற்றும் முன்பிள்ளைப் பருவ அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆர்.எம். இம்டாட் ஆகியோர் கலந்துகொண்டு செயலமர்வை நடத்தி வைத்தனர்.

மேலும் இச்செயலமர்வில் கலந்துகொண்ட பயனாளிகளுக்கு உலர் உணவுப் பொதிகள், சிறுவர் ஆரோக்கிய பொதிகள் என்பனவும் வழங்கி வைக்கப்பட்டன.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம், இல-551A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 22.09.2022இல் வெளியிடப்பெற்றது.